Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 107

National Tamil Daily தேசிய தினசரி

(29-5-65)

விசுவாவசு வைகாசி 16 முஸ்லிம் பிறை 27 சனிக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 18-00 | 8-25 |

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

# ஆபத்தான நிலையில் அம்புலன்ஸில் வந்த பெண்

## ஆஸ்பத்திரி ஊழியர் அசிரத்தையால் மரணம்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உயிருடன் போராடிக்கொண்டிருந்த பெண் நோயாளி, அவசர சிகிச்சைக்காக காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸில் கொண்டுவரப்பட்டு, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் பிற்பகல் 1-25 மணிக்கு அனுமதிக்கப்பட்டு 3 மணி வரை எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படாததால் மரணமான சம்பவமொன்று கடந்த வாரம் நிகழ்ந்துள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சங்கரன் மனைவி பார்வதியின் (வயது 45) மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நடத்திய மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

காலஞ்சென்ற பார்வதி உடனடியாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியுமென்று மரணவிசாரணையின் போது சாட்சியமளித்த டாக்டர் விசுவரத்தினம் கூறினார்.

டாக்டர் விசுவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

காலஞ்சென்றவர் பிற்பகல் 1-25 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார், பிற்பகல் 2 மணிக்கு வார்ட்டிற்கு கொண்டுவரப்பட்டார். காலஞ்சென்றவரை மரணமாகும்வரை வைத்திய அதிகாரிகள் பார்வையிடவுமில்லை, சிகிச்சை அளிக்கவுமில்லை. பிற்பகல் 3 மணி வரை அவருக்கு சிகிச்சையளிக்கப்படவில்லை.

### விடுதியில் இருந்ததாக டாக்டர் சாட்சியம்

டாக்டர் கே. புவனேந்திரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

அன்றைய தினம் நான் 6-ம் நம்பர் வார்ட்டில் கடமையாற்றினேன். காலஞ்சென்றவர் பிற்பகல் 1-25 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, 2 மணி அளவில் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார். நான் பிற்பகல் 3 மணிக்கு வார்ட்டிற்குச் சென்றபொழுது அந்த நோயாளி இறந்திருக்கக் காணப்பட்டார். நோயாளியின் படுக்கை டிக்கட்டில், இருதய ஓட்டம் நின்றதனால் மரணம் ஏற்பட்டதென எழுதப்பட்டிருக்கிறது. பிற்பகல் 1-25 மணி முதல் 3 மணி வரை நான் எனது விடுதியில் தங்கியிருந்தேன். என்னை யாரும் அழைக்கவில்லை.

### 'உடனடியாக அனுமதித்தேன்'

திரு. எஸ். சோமசுந்தரம் (அப்போதிக்கரி) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

அன்றைய தினம் நான் கடமை புரிந்தேன். காலஞ்சென்றவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸில் கொண்டுவரப்பட்டார். நான் உடனடியாக ஒரு அனுமதிச்சீட்டு எழுதி 6-ம் நம்பர் வார்ட்டிற்கு அனுப்பினேன். அந்நேரம் அங்கு கடமையாற்றிய தொழிலாளர்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவரை 14-ம் நம்பர் வார்ட்டிற்குக் கொண்டுசென்றிருந்தனர். அவர்கள் திரும்பி வந்ததும் தாமதிக்காமல் உடனடியாக பிற்பகல் 1-55 மணிக்கு வார்ட்டிற்குக் கொண்டுசென்றனர். அச்சமயம் காலஞ்சென்றவர் அறிவுள்ள நிலையிலிருந்தார். ஆஸ்பத்திரியில் [illegible]

பிற்பகல் 1-35 மணிக்கு அனுமதித்தேன்.

### டாக்டர் விடுதியில் இல்லை

6-ம் நம்பர் வார்ட் நேர்ஸ் திருமதி ஆர். எப். சேவியர் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

பிற்பகல் 2 மணிக்கு நோயாளியை வார்ட்டில் அனுமதித்தேன். நான் உடனடியாக விடுதியிலுள்ள வார்ட் வைத்தியருக்கு கங்காணி மூலம் அறிவித்தேன், 30 நிமிடங்களுக்குப் பின் அக்கங்காணி திரும்பி வந்து "டாக்டர் விடுதியில் இல்லை" என்று தெரிவித்தார். அதன் பின் நான் தொலைபேசிப் பகுதிக்கு அறிவித்து டாக்டருடன் தொடர்பு கொள்ளும்படியும், உடனடியாக டாக்டரை வார்ட்டிற்கு அனுப்பும்படியும் கூறினேன்.

### 3 மணிக்கு டாக்டர் வந்தார்

பிற்பகல் 3 மணிக்கு டாக்டர் புவனேந்திரன் வார்ட்டிற்கு வந்தபோது நோயாளி இறந்திருக்கக் காணப்பட்டார். பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை நோயாளிக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை.

நான் இவ்விஷயமாக டாக்டருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. ஏனெனில் விடுதி டாக்டர் மூலமே தொடர்பு கொள்ளவேண்டுமென்பது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

### 'டாக்டரைத் தேடினேன்'

அற்றண்டன்ற் எலை. பொன்னம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

நான் இவ்விஷயத்தை அறிவிக்க டாக்டர் புவனேந்திரன் தங்கியிருக்கும் விடுதிக்குச் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

39-ம் இலக்க தேசிய சுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

1-ம் பரிசு
10 X 0064 — ரூ 83,870,00

2-ம் பரிசு
61 G 0892 — ரூ. 13,548 00

3-ம் பரிசு
05 Q 0498 — ரூ. 3,387,00

ரூ. 169 85 கொண்ட பரிசுகள்: (6-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: "யப்பான்"

## திருமணத் தகராறு இளம் பெண்ணின் உயிரை குடித்தது

பருத்தித்துறை, வெள்ளி

பாடசாலையால் வீடு திரும்பியதும் நச்சுத்திராவகம் அருந்தி 19 வயது நிரம்பிய மாணவி தற்கொலை செய்து கொண்ட பரிதாபகரமான சம்பவம் ஒன்று நேற்றைய தினம் அல்வாய் மேற்கில் நடைபெற்றது.

கதிர்காமத்தம்பி சரோஜா என்னும் மாணவிக்கு விவாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததாயும் ஆனால் விவாகத்தையே பெருதுவிடக்கூடிய கருத்து வேற்றுமைகள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதால் ஏற்பட்ட மனவேதனையே இம் மாணவியின் இம்முடிவுக்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

நச்சுத்திராவகம் அருந்திய வுடன் வயிறு பற்றியெரிவதாகக் கூறிய அந்த இளம் பெண்ணை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றும் பயனளிக்காதுபோய்விட்டது.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. இராசரத்தினம் தற்கொலையென விசாரணைமுடிவில் தீர்ப்புவழங்கினார்.

கடந்த இரவு விவாகமான நாகரத்தினம் என்னும் பிறிதோர் பெண்ணும் கிணற்றுள் விழுந்து தற்கொலைசெய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. 20 வயதுடைய இப் பெண் சமீபத்தில் விவாகமானவரென்று அறியப்படுகின்றது. இச்சம்பவமும் அல்வாய் மேற்கிலேயே நடைபெற்றது.

## அமெரிக்க ஆயுதங்கள்

வாஷிங்டன், மே 28

அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்ததாக இந்தியாவும், பாகிஸ்தானும் கூறிய புகார்கள் குறித்து இதுவரை எவ்வித முடிவும் செய்யப்படவில்லை என்றும், இரு நாடுகளுக்கும்சேர்ந்து இராணுவஉதவி அளிக்கப்படுமெனவும் வாஷிங்டனில் அறிவிக்கப்படுகிறது.

## போதியளவு அரிசி உண்டு

கொழும்பு, வெள்ளி

இந்நாட்டில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் இல்லையென்றும் தேவையான அரிசிக்கு ஒழுங்குகள் செய்திருப்பதாயும் நான்கு மாதத்திற்குத் தேவையான அரிசி இருப்பதாகவும் உணவு அமைச்சு, உணவு இலாகா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள நாடுகளிலிருந்து அரிசி வந்துசேருமென்றும் தெரியவருகிறது.

## 'ஈழநாடு'

30-5-65 வாரப்பதிப்பு
யாழ்ப்பாணத்தில்
வேள்விப்பலி,
•
நம்பலாம் நடந்தது,
•
'தூரத்துப் பச்சை'
— ஆ தேவராசன்.
•
'வானத்தாமரை' தொடர்கதை, கவியரங்கம் மற்றும் பல சுவையான புதிய அம்சங்களுடன் வெளிவருகிறது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எங்கிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

தவறுசெய்வது மனித சுபாவம். தவறை ஒப்புக்கொள்வதால், அத்தவறுகளை நம் முன்னேற்றத்துக்கான படிகளாக மாற்றிக்கொண்டவர்களாவோம்.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

[illegible]

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 16 உ (29-5-65)


## வேலையற்றோர் பிரச்னை

வேலையற்றோரின் அவசர பிரச்னையைத் தீர்ப்பதற்காக 5 அமைச்சர்களடங்கிய ஓர் உப கமிட்டியை நியமித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இக்கமிட்டியினர் ஒரு திட்டத்தைத் தயாரித்து, கூடுமானவரை வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. இந்த முயற்சி நல்லதே என்றாலும் இது எவ்வளவு தூரம் வெற்றிபெறமுடியுமென்பது இனித்தான் தெரியவேண்டும்.

அரசாங்க தொழில் கஜெட் அளிக்கும் புள்ளிவிபரப்படி இலங்கையிலே சென்ற ஜனவரி மாதத்தில் ஒருலட்சத்து 66 ஆயிரத்து 482 பேர் வேலை தேவை என்று பதிவுசெய்துகொண்டிருந்தனர். மார்ச்சு மாதத்தில் இந்த எண்ணிக்கையில் சுமார் ஆயிரம் குறைந்துள்ளதாம். ஆனால் இந்தக்கணக்கைக்கண்டு, இப்பிரச்னையை குறைந்துவருவதாகக் கருதிவிடக்கூடாது. சமீபத்தில் வெளியான ஜி. ஸி. ஈ. பரீட்சை எழுதிய சுமார் இரண்டு லட்சம் மாணவரில் பெரும்பாலோர் தேறவில்லை. அவர்களில் சிலர் மீண்டும் பரீட்சைக்கு எழுதலாம். தேறிய மாணவர்களுக்கும் தேறாதவர்களுக்கும் ஒரு பொதுவான பிரச்னை. இனி என்ன செய்வதென்பதுதான். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையில் கல்வித்திட்டம் இல்லாததால், நம் வாலிபர்கள் பெரிதும் உற்சாகமிழந்து, மனமுடைந்தவர்களாக இருக்கின்றனர். வருடாவருடம் இவர்களது எண்ணிக்கை கூடுவதால், வேலையில்லாப் பிரச்னை அதிகரித்துக்கொண்டே போவதில் வியப்பில்லை.

இதில் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுண்டு. ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டது போல், மக்கள்தான் ஒரு நாட்டின் உண்மையான செல்வம். அம்மக்கள் உழைப்பின்றி, தங்கள் நேரத்தை வீணாக்குவதாயின் அவ்வளவும் நாட்டுக்குப் பெரும் நஷ்டமாகும். கம்யூனிஸ நாடுகளில் எல்லா மக்களின் உழைப்பையும் கட்டாயமாகப் பயன்படுத்த ஒழுங்குகள் உண்டு. அதனால் அங்கு வேலையில்லாப் பிரச்னை இல்லாதுபோவதுடன் நாடும் பல துறைகளிலும் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

ஆனால் இலங்கைபோன்ற ஜனநாயக நாடுகளில், திறமையுள்ள வாலிபர்கள் பலர் உழைக்கத் தயாராக இருந்தும் அவர்களில் பலருக்கு அதற்கான வாய்ப்புகள் இல்லாமையால், நாட்டுக்கு நஷ்டமேற்படுவதுடன், அவர்கள் மனமும் ஜனநாயகத்திலிருந்து, புரட்சிப்பாதைகளில் திரும்புமாயின் அதில் வியப்பில்லை. படித்த வேலையற்றோர் அதிகமுள்ள கேரள மாகாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கே தேர்தலில் அதிக வெற்றி கிடைப்பதன் காரணமும் இதுதான்.

ஜனநாயக தர்மம் பலப்படவேண்டுமாயின், சுதந்தரம் பெற்ற நம் நாடு பலவகைகளிலும் முன்னேறவேண்டுமாயின் இங்கு ஒவ்வொருவருடைய திறமையையும் உழைப்பையும் பூரணமாகப் பயன்படுத்த ஒழுங்குசெய்யவேண்டும். வேலையில்லாவிட்டால், இங்கு உயிர்வாழ உணவுமற்ற துரதிருஷ்டமான நிலையுள்ளது. மேலை நாடுகளில் வேலையற்றோர் இன்ஷியூரன்ஸ் பாதுகாப்புத் திட்டங்கள் இருப்பதால், அவர்கள் பட்டினி கிடக்கவேண்டிய அவ்வளவு மோசமான நிலையில்லை. இங்கும் வேலையற்றோர் பட்டினி கிடக்காமல் தடுக்க சமூக உதவித்திட்டத்தையாவது அமுலுக்குக்கொண்டுவரவேண்டும். பணமில்லை என்று இதை அலட்சியஞ்செய்துவிடக்கூடாது. உழைக்கக்கூடிய நம் வாலிபர்களே நாட்டின் மேலான செல்வமாதலால், அவர்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. இதேசமயம் அரசாங்கத்தையே நம்பி இராமல், நம் வாலிபர்கள் சுயதேவைப்பூர்த்திக்கான திட்டங்களில் எவ்வளவோ ஈடுபட்டுத் தங்கள் தேவைகளைத்தாங்களே தீர்த்துக்கொள்ள முடியுமாயின் அவ்வளவும் நல்லதாகும்.

# வில்லூன்றி வீரகத்தி விநாயகர் இன்று ரதோற்சவம்

— குல. சபாநாதன் —

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### வீரகத்தி விநாயகர் துதி

பெரும்பொருட்கிடனும் பிரணவவடிவிற்
பிறங்கிய வொருத்தனிப் பேறே
யரும்பொருளாகி மறைமுடிக்கண்ணே
யமர்ந்த பேரானந்த நிறைவே
தரும் பரபோக சித்தியுஞ் சுத்த
தரும முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே
வீரகத்தி விநாயக விக்கினேசுரரே.

ஈழவளநாட்டிலே பௌத்தம், கிறிஸ்தவம் முதலிய பல்வேறு சமயங்கள் வந்து குடியேறுவதற்கு முன்னர் இந்து சமயமே யாண்டும் பரவியிருந்தது. இதனை யான் சொல்லவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்று அவ்விழாவினை முதன்முதலாகக் கொண்டாடுதற்குச் சிறப்பான ஒழுங்குகள் செய்யப்பெற்றபோது இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயம் வெளியிட்ட சுதந்திரதின சிறப்பு மலரிலே அக்காலத்தில் இலங்கையிலே இந்திய ஹைகமிஷனராகக் கடமையாற்றியவரும் ஆரிய மொழி விற்பன்னருமாகிய திரு. எம். எஸ். ஆனே அவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் இந்து சமயத்தின் தொன்மையினையும், பழம் பெரும் சைவ வைஷ்ணவ கோவில்களையும் பற்றி விபரித்துக் காட்டியுள்ளார்கள். தெய்வந்துறையிலுள்ள (டொண்ட்ரா) திருமால் ஆலயத்தில், இற்றை ஞான்றும் சமஸ்கிருதமே பூசை வழிபாட்டுக்குரிய மொழியாக உபயோகிக்கப்பட்டு வருவதையும் இந்த ஆராய்ச்சி அறிஞர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### இராமபிரான் விஜயம்

மேலும் அரசியல் நெறி தவறாது செங்கோல் ஓச்சியவனும் தலை சிறந்த சிவபக்தனும், ஆழ்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரியைத் தன் இல்வாழ்க்கைத்துணையாகப் பெற்றவனும் ஒரு தலை மட்டுமேயுடையவனும் (ராவணனுக்குப் பத்துத் தலை. -மஞ்சரி 1965 மே இதழ்) ஆகிய இராவணன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சைவ சமயமே சமயமாக விளங்கிற்றென்பது புலப்படும்.

இராவணன் ஆண்ட இலங்கை யாண்டுளது என்பதை வரலாற்று ஆராய்ச்சித் துறையில் தலைசிறந்து விளங்கிய காலஞ்சென்ற திரு. க. நடேசபிள்ளையவர்கள் தக்க சான்று காட்டி முடிவுகட்டியுள்ளார்கள். ஆகவே இராமபிரான் தன் மனைவியைத்தேடி நம்நாட்டிய இலங்கைக்கே வரவேண்டியதாயிற்று என்பது புலப்படும்.

### முன்பு நடந்தது

இராமபிரான் தன் மனைவியைச் சிறைமீட்கப்பெரும்படையுடன் இராமசேது எனப்படும் தற்காலிகமான பாலம் இட்டு இலங்கைக்கு வந்து சேர்ந்தபொழுது வட இலங்கையில் உள்ள "கொட்டடி" என இக்காலத்தில் வழங்கப்படும் சிற்றூரில் தங்கியிருக்க ஏற்பட்டதாம். அப்பொழுது பெரும்படைக்குப் போதிய நீர்வசதியின்மையைக் கண்ணுற்ற இராமன் தன் கையிலிருந்த கோதண்டத்தால் நிலத்திலே ஊன்றியதும், அவ்விடத்திற்றானே ஓர் ஊற்றுவெளிக்கிளம்புவதாயிற்று. இதனால் இவ்விடம் வில்லூன்றி எனவும் பூர்வ தனுக்கோடி எனவும் பெயர் பெறுவதாயிற்று என்பது பௌராணிகர் கூற்று. இது புனித தீர்த்தமாக விளங்கியதால், இதற்கண்மையில் புராதன சிவாலயம் ஒன்றிருந்த

(6-ம் பக்கம் பார்க்க)

# உலக சரித்திரத்தில் முக்கியத்துவ நிகழ்ச்சிகள்

## இடபத்தில் ஆறுகிரககூடம்—சூரியகிரகணம் 1965 மே முதல் டிசம்பர் மாதத்திலும் நடக்கும்

— சோதிட ஆசான் செ. தெல்லியூர் —

இம்மாதம் (29-5-65) 16-ந் திகதி சனிக்கிழமை இரவு 11-42 முதலாக இடப இராசியில் ஆறு கிரகங்கள் கூடுகின்றன. இக்கிரக நிலையானது 18-ந் திகதி திங்கள் (31-5-65) இரவு 1மணி 58 நிமிடம் வரை இருக்கும் இக்கிரகம் சேர்க்கை 17-ந் திகதி (30-5-65) ஞாயிற்றுக்கிழமை நடக்கும் பூரணசூரிய கிரகணமும் என்ன செய்யுமென்று மக்கள் பலவாறு சிந்திக்கவே செய்கின்றனர். இக்கிரக சேர்க்கை பற்றியும் கிரகணம் பற்றியும் வேறு சஞ்சிகைகளில் எம்மால் எடுத்துரைக்கப்பட்டிருப்பினும் ஈழநாடு வாசகர்கள் நலன்களுக்காக சாங்கமாக சில வார்த்தைகள் பொறிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இடபஇராசியில் சூரியன் சந்திரன், புதன், வியாழன், வெள்ளி இராகு ஆகிய ஆறும் கூடும் வேளையில் சனி கும்பத்திலும் செவ்வாய் சிங்கத்திலும் கேது விருச்சிகத்திலும் இருக்கும் இதனைத்தொடர்ந்து ஞாயிறுவரும் சூரியகிரகணத்தின்போதும் கிரக அமைப்பு இதுவாகவே உளது. சூரியகிரகணமானது ரோகிணி நட்சத்திரம் வருகின்றது. இக்கிரகணம் 310 நிமிடங்களுக்கு இருக்குமாயினும் எங்களுக்குத் தோற்றமாட்டாது. ஆயினும் இதனால் ஏற்படும் விளைவுகள் எங்களையும் அண்டையிலுள்ள இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளையும் தூரகிழக்கையும் பாதிக்கவேசெய்யும். எல்லாக் கிரகங்களும் ஸ்திரமான இராசிகளில் அமைந்துள்ளன. கிரகணம் நடப்பதற்கு கேந்திர ஸ்தானங்களில் பாபிகளான சனியும் செவ்வாயும் அமைகின்றன. அத்துடன் இரண்டும் ஒன்றையொன்று எதிர்நோக்குகின்றன.

இடப ராசியில் ஏற்படும் இந்தச் சூரிய கிரகணமும் [illegible]

ஆபத்தைக் குறிக்கின்றன இக்காலத்தில் பிரபலஸ்தர்கள் பலர் பலவேறு காரணங்களாலும் உயிர்துறக்க இடமுண்டு. இக்கிரககூடமும் கிரகணமும் இதனைத் தொடர்ந்துவரும் சந்திர கிரகணமும் (14-6-65) பின் கார்த்திகை 8-ந் தேதி (23-11-65) வரும் சூரிய கிரகணமும் விசுவாவசு ஆண்டைச் சரித்திரத்தில் பிரபலமாக்கிவிடும். கேந்திர நாடுகளின் தலைவர்களுக்கு நிச்சயமாக ஆபத்தை விளைக்கும். இடப ராசியில் உள்ள வியாழ பகவான் சூரிய சந்திர சேர்க்கையால் மறைபடுவதால் அவரது சுபசேர்க்கை ஆபத்துகளை முற்றாக நீக்க இடமிருக்காது. சேதத்தை ஓரளவு தணிக்க உதவுவார்.

இக்கிரகணமும் கிரககூடமும் தலைவர்கள், மந்திரிகள், பிரபலஸ்தர்கள் மறைவைக் குறிப்பதுடன் காலநடை செல்வ அழிவையும் காட்டுகின்றது; வராகமிகிரனார் கூற்றும் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. அத்துடன் பயிர்வகைச் சேதமும் கேந்திர நாடுகளில் ஏற்பட இடமுண்டு இந்தக் கிரகணத்தாலும் கிரக கூடத்தாலும் ஏற்படும் நிலைமையானது 1962ல் ஏற்பட்ட அட்ட கிரக சேர்க்கையைப் போலல்லாது பல்லாண்டுகளுக்கு மனித குலத்திற்கு நட்டத்தை விளைவிக்கும். மக்களுக்கு அந்நேரத்தில் நாம் எடுத்துக்கூறிய ஆறுதலை இங்கு எடுத்துரைப்பது இயலாததாயினும் தெய்வ வழிபாடும் சத்கரும ஈடுபாடும் இருப்பின் பெருமளவில் கஷ்டங்களைத் தவிர்க்க இடமுண்டென உறுதிபகரலாம். எங்கள் நாட்டில் மட்டுமின்றி கேந்திர நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, சீனா, ஜப்பான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலும் இவற்றின் எதிரொலிப்பை

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் [illegible]

ஓர் ஊரிலுள்ள குளத்திலே நீர் நிறைந்திருந்தால் அது எப்படி ஊர் மக்களுக்கெல்லாம் பயன்படுமோ அதுபோலவே பேரறிவாளனின் செல்வமுமாகுமென்பது திருவள்ளுவர் வாக்கு. இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டினை மதுரைக்குச் சுமார் ஐம்பது மைல் தூரத்திலுள்ள தேனி எனும் ஊரிலே கண்டேன்.

தேனி மலையில் ஓர் அழகான முருகன் கோவில் உளது. குடிகள் குறைவு. வருடத்தில் ஒரு நாள் அங்கு பெரிய திருவிழாவை ஒரு நாட்டுக்கோட்டை தனவைசியர் நடத்துவதாயும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு இருவேளையும் அன்னதானம் நடப்பதுடன், இயல், இசை, நாடகமெனும் முத்தமிழ்க் கலை விருந்தையும் அவர் அளிப்பதாயும், மதுரை ஆதீன அதிபர் தலைமைவகிப்பதாகவும் கேட்டு அவருடன் அங்கு சென்றேன்.

இலங்கையைவிட இந்தியாவிலே வரிகள் அதிகம் போடுவதாயும், அதனால் இந்தியாவில் தானதருமங்கள் பெரிதும் நின்றுவிட்டதாகவும் ஒரு புகாருண்டு. என்றாலும் அண்ணாமலைச்செட்டியார் என்ற தனவந்தர் சென்ற 30 வருடகாலமாக இந்தத்தர்மத்தை பல்லாயிரக்கணக்கான செலவில் நடத்திவருவதாக அறிய வியப்பாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது. மலையின் அடிவாரத்தில் பெரிய பெரிய பந்தல்கள் வந்தவர்களுக்கெல்லாம் நல்லவிருந்து (மகேஸ்வர பூசை) மதுரை சந்நிதானத்தின் தலைமையில் பல அறிஞர்கள் பேசினர். தமிழகத்திலே இப்போது பேச்சாளருக்கும் 50 முதல் 800 ரூபாய் வரை ஒரு பிரசங்கத்துக்குக் கொடுப்பதாக அறிந்தேன். மாணவிகளும் உற்சாகத்துடன் பங்குகொண்டனர்.

பேச்சுகள் முடிந்தபின் திறந்தவெளி நாடக அரங்கிலே, கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம், எஸ். டி. சுப்புலெட்சுமி இவர்கள் நடிக்கும் வள்ளி திருமண நாடகம். டிக்கெட் இல்லை. கூட்டத்துக்குக்கேட்கவேண்டுமா! பல மைல் தூரத்திலிருந்து சைக்கிள்களிலே பலர் வந்திருந்தனர். மலை மீது மின்விளக்குகளால் கோவில் ஜகஜோதியாகவிளங்கியது. ஆறுமுகனுக்கு சந்தனக்காப்பு அலங்காரம். ஒரே ஒருவர் இவ்வளவையும் தம் சொந்தச் செலவில் செய்கிறாரெனின், அவரை யார்தான் வாழ்த்தமாட்டார்கள்? செல்வந்தர்கள் எல்லாரும் இவ்விதம் தர்மங்கள் செய்வதாயின் புரட்சி கோஷங்கள் எழுமா!

பல ஊர்களில் தனவைசியர்கள் சத்திரங்கள், வேதபாடசாலைகள் கட்டி, நான்மறை அறங்கள் ஓங்கச் செய்துள்ளனர். சோழ நாட்டிலே சின்ன ஊர்களிலும் கோவில்கள் எவ்வளவு சிறப்பு! பூஜைகளெல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஊருக்கே பெருமையும் அழகும் அளிப்பது கோவில்கள் தாம்.

* * *

இலங்கை வானொலியிலிருந்து அரசியல் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பெற்றிருந்த இரு அறிவிப்பாளர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனராம்! புதிய டைரக்டர் ஜெனரல் வின்சென்ட் பண்டித, திறமையும் தெய்வபக்தியுமுள்ளவரென்றும் பதவியேற்றதும் நல்லூருக்கு வந்து முருகனை வழிபட்டுச் சென்றதாகவும், அவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலை பார்த்தபோது நல்லூர் முருகனிடம் ஈடுபாடு ஏற்பட்டதென்றும் ஓர் அன்பர் மூலம் அறிந்தேன்.

இலங்கை வானொலியை ஒரு கார்ப்பரேஷனாக்கிவிட ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் கேள்விப்பட்டேன். அப்படிச்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நேருவழியே இந்தியாவின் கொள்கை; ஆனால் ஆக்கிரமிப்பை விரட்டதயங்கோம்"

## டில்லி கூட்டத்தில் பிரதமர் எச்சரிக்கை

## பலநாடுகளில் நேருநினைவு தினம்

புதுடில்லி, மே 28

நேருவின் சமாதான வழிகளையே இந்தியா பின்பற்றும் என்றும் ஆனால் நாட்டை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கவும் அது தயங்காது என்றும் இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர்சாஸ்திரி நேற்று நேரு சிரார்த்ததினத்தை முன்னிட்டு ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

யுத்தம் ஒன்றைத் தொடுப்பதுபற்றி பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் பேசிவருகினர். பாகிஸ்தான் இந்த வழியில் முயன்றால் என்ன செய்ய வேண்டும் என்பது இந்தியத் தலைவர்களுக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

"வரையறுக்கப்பட்ட யுத்தமும் கூட உலகக் குழப்பத்தைத் தோற்றுவிக்கும். கட்ச் பிராந்தியம் இந்தியாவுக்குச் சொந்தமானது. பாகிஸ்தான் தனது ஆக்கிரமிப்பைக் கைவிட வேண்டும். இதுசம்பந்தமான பேச்சுகள் இப்போது நடைபெற்று வருகின்றன" என்றும் அவர் கூறினார்.

"கட்சில் பாகிஸ்தான் வாபஸ் பெருவிட்டால் எந்த நிலைக்கும் தயாராய் இருக்க வேண்டும். இந்திய நகரங்கள் மீது விமானத் தாக்குதல், குண்டுமாரி ஆகியவற்றை எதிர்நோக்கவும் தயாராய் இருக்க வேண்டும்" என்றார்.

சாஸ்திரி, வேறுபல அரசியல் கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

மற்று நாடெங்கும் நேருநினைவுக் கூட்டங்கள் நடைபெற்றன. மக்கள் அவர் விட்டுச் சென்ற கடமைகளை நிறைவேற்ற பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.

பம்பாயிலுள்ள சீனர்கள் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி நேருவின் கொள்கையைப் பாராட்டிப் பேசினார்கள்.

பலநாடுகளில் புத்தபிக்குகள் ஆலயங்களில் விசேஷ பூஜைகள் நடத்தினர்.

"இந்தியத்தாயின் மைந்தரான புதல்வர் நேரு என்பதை அனைவரும் ஞாபகத்தில் கொண்டிருக்கிறோம்" என ஆச்சார்ய விநோபாபாவே கூறினார். சேவா கிராமத்தில் நாற்புயர்ச்சும் ஒன்றும் நடைபெற்றது.

நேபாளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நேருவின் ஆதரவு இல்லாவிட்டால் நேபாளத்தில் ஜனநாயக சுதந்திரம் இருந்திருக்காது எனப் பலர் கூறினர்.

கேங்டாக்கில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சிக்கிம் மகாராஜா பேசியபோது 'நேரு ஒரு போதி சத்வர்' எனக் குறிப்பிட்டார்.

மாஸ்கோவிலும் நேரு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ரேஷன் வாங்க கியூவில் நின்ற நேரு

புதுடில்லி மே 28

1946-ம் ஆண்டு யார்க் வீதியிலிருந்த நேருவின் இல்லம் நூற்றுக்கும் அதிகமான முஸ்லீம் அகதிகளின் அடைக்கலமாக விளங்கியது. நேரு வீட்டில் எல்லா உணவுப் பொருட்களும் தீர்ந்து விட்டன. கலவரங்கள் நிறைந்த காலமானதால் அரசாங்க ரேஷன் கடைகளைத்தவிர வேறு கடைகள் இல்லை.

ஒரு நாள் காலை அரசாங்க ரேஷன் கடையின் முன் நின்றிருந்த "கியூ" வரிசையில் நேரு நின்றுகொண்டிருந்தார். நேருவின் உதவியாளர்களில் ஒருவர் அதைப் பார்த்துவிட்டார். அவர் எவ்வளவு கன்றுடியும் நேரு கேட்கவில்லை. கியூவில் நின்றே பொருட்களை வாங்கினர்.

## அப்துல்லா ஆர்காட்டில் வைக்கப்படுவார்

காரச்சி, மே 28

உதக மண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஷேக் அப்துல்லாவை ஆர்க்காட்டுக்கு மாற்ற சென்னை அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. உதக மண்டலம் முனிசிபல் எல்லைக்குள் கடமாட ஷேக் அப்துல்லா அனுமதிக்கப்பட்டிருப்பது அபாயமானதென்றும், ஆர்க்காட்டில் நல்ல பாதுகாப்பு இருக்குமென்றும் சென்னை அரசாங்கம் கருதுகிறது.

## ராமேஸ்வரம் புயல்: ஐ. நா. நன்கொடை

ஐ. நா. மே 28

ராமேஸ்வரம் புயல் கஷ்ட நிவாரணத்துக்காக ஐ. நா. காரியாலய ஊழியர்கள் ரூ. 8500 செக் ஒன்றை இந்திய பிரதிநிதி திரு சக்ரவர்த்தியிடம் கொடுத்தனர்.

ஐ. நா காரியதரிசி யுதாண்ட அந்த செக்குடன் அனுப்பியுள்ள கடிதத்தில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தாமும், தமது காரியாலய ஊழியர்களும் அனுதாபம் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

## மார்கரெட் இளவரசி யு. எஸ். செல்வார்

லண்டன், மே 28

மார்கரெட் இளவரசியும், அவரது கணவரும் வருகிற நவம்பர் மாதம் மூன்றுவார அமெரிக்க விஜயத்தை மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

## மனிதாபிமானமும் ஜனநாயகமும்

பெர்லின் மே 28

"கடந்த வருடங்களை நாங்கள் சரிவரப் பயன்படுத்தியுள்ளோம் என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உலக மக்களுக்கு அறிவிக்கிறது. யுத்தக் கொடியவர்களையும் இராணுவப் பித்தர்களையும் நாங்கள் ஒழித்துக் கட்டிவிட்டோம். ஜெர்மன் ஜனநாயக குடியரசில் மனிதாபிமானமும் ஜனநாயகமும் வெற்றிபெற்றுள்ளன" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி திரு. உல்பிரிச் பாஸிசத்திலிருந்து ஜெர்மனி விடுதலைபெற்ற 20 வது ஆண்டு விழாவை முன்னிட்டு பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர். அவர் விடுதலைக்கும், சோவியத் [illegible] வரவேற்றர்.

## இரு எல்லைகளிலும் பல ஊடுருவல் சம்பவங்கள்

ஸ்ரீநகர், மே 28

காஷ்மீர் போர்நிறுத்தக் கோட்டிற்குள் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக 2 பாகிஸ்தானியர் பலியானார்கள். 30 பாகிஸ்தானிய துருப்புகள் பாரத கிராமம் ஒன்றில் நுழைந்து சுட ஆரம்பித்தனர் என்றும், திருப்பிச் சுட்டபோது இறந்த ஒரு வீரரின் பிரேதத்தையும், வெடிமருந்துகளையும் விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டன். ஐ நா. பார்வையாளர்களிடம் பிரேதமும் கைப்பற்றிய ஆயுதங்களும் காட்டப்பட்டன.

மேற்கு பாகிஸ்தான் எல்லையில் 15 பாகிஸ்தானிய ஆயுதக் கோஷ்டியினர் கிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப் படையின் உதவியுடன் ஒரு கிராமத்திற்குள் நுழைந்து வீடுகளைச் சூறையாடினர் என்றும் மாடுகளை அவர்கள் ஓட்டிச் சென்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக கையளிக்கப்பட்ட ஆட்சேபக் குறிப்பில் மாடுகளைத் திருப்பித் தருமாறு கோரப்பட்டிருக்கிறது.

## மகாத்மா பிறந்தவீட்டை பாதுகாக்க ஏற்பாடுகள்

ராஜ்கோட், மே 28

போர்பந்தரில் மகாத்மா காந்தி பிறந்த வீடு, அதன் சரித்திர முக்கியத்துவத்தைக் கருதி பத்திரமாகப் பாதுகாக்கப்படும் இப்பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது.

இப்பழைய கட்டடத்தைக் குறிப்பாக மகாத்மாகாந்தி கஸ்தூரிபாய் காந்தி ஆகியோரின் அறைகளைப் பாதுகாப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மகாத்மாகாந்தியின் வீட்டில் மாறுதல்கள் எதுவும் செய்யாமல் பாதுகாப்பதற்கான பல நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன;

இந்த வீட்டை காந்திஜியின் கொள்ளுப்பாட்டனரான ஹரிஜிவான்ஜி ரெய்தாஸ் காந்தி 1777-ல் உள்ளூரைச் சேர்ந்த ஒரு பெண்ணிடமிருந்து வாங்கினார். காந்திஜியின் பாட்டனரான உத்தம சந்த்ஜி அந்த வீட்டில் சில மாறுதல்களைச் செய்து அதை 2 மாடிக் கட்டடமாக்கினர்.

காலப்போக்கில் குடும்பத்துக்கு இடவசதித்தேவை அதிகரித்ததால் மேலும் ஒரு மாடி கட்டப்பட்டது. எனவே காந்திஜி பிறந்தபோது அது மூன்று மாடிக்கட்டடமாக இருந்தது.

காந்திஜி பிறந்த அறை மிகவும் இருண்ட அறையாகஇருந்தது. சாதாரணமாக அது உணவு தானியங்கள். படுக்கைகள் மற்றும் தட்டு முட்டுச் சாமான்களை வைக்கும் அறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

காந்திஜி ராட்டையில் நூல் நூற்பதைச் சித்தரிக்கும் படம் ஒன்று இப்போது மேற்படி அறையில் இடம்பெற்றுள்ளது. இப்படம் மாட்டப்பட்டுள்ள சுவருக்கு எதிர்ப்புறம் உள்ள சுவரை காந்திஜியின் தகப்பனார் கரம்சந்த்ஜி, தாய் புட்லிபாய் ஆகியோரின் படங்கள் அலங்கரிக்கின்றன.

காந்திஜிக்கும் கஸ்தூரிபாய்க்கும் 1883-ல் திருமணம் நடைபெற்றபோது மகாத்மாவுக்கு 14வயது திருமணம் இப்பழைய கட்டடத்தில் தான் நடைபெற்றது. காந்திஜி பிறந்த அறைக்கு எதிர்ப்புறத்தில்தான் திருமணப்பந்தல் போடப்பட்டிருந்தது. காந்திஜி பிறந்த வீட்டுக்கருகில் 'கீர்த்தி மந்திர்' என்னும் பெயர் கொண்ட புதிய நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## டாக்டர் ஹூஸெய்ன்

அம்மான், மே 28

இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹூஸெய்ன் நேற்று ஜோர்டான் தலைநகரான அம்மானுக்கு வந்து சேர்ந்தார்.

## உளவுபார்த்த பாக். அழகிகள்: பஞ்சாபில் கைதாயினர்

ஜலந்தர், மே 28

பஞ்சாப்-பாகிஸ்தான் எல்லையில் இந்தியப் பகுதியில்புல் வெட்டிக் கொண்டிருந்த இரு அழகிய யுவதிகளை கைது செய்து சோதனையிட்டபோது அவர்கள் இடுப்பில் தோட்டாக்களுடன்கூடிய துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்தது தெரிந்தது. கிராமப் பெண்களைப் போல உடையணிந்திருந்தபோதிலும், அவர்களால் சரளமாக ஆங்கிலம் பேச முடிந்தது. அவர்கள் பாகிஸ்தான் உளவாளிகள் என்பது தெரிந்தது.

பஞ்சாபில் பல்வேறு நகரங்களில் பாக். உளவாளிகள் வேவு பார்த்து வருவதாக அவர்களை விசாரித்ததிலிருந்து தெரிந்தது. படித்த வாலிப அழகிகள் ஏராளமான பேரை உளவு வேலைக்காக பாகிஸ்தான் அரசாங்கம் அமர்த்தியிருப்பதாக இந்தப் பெண்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவ்விரு பெண்களும் கொடுத்த துப்புகளிலிருந்து 12 பாகிஸ்தான் உளவாளிகளுக்குமேல் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

## உலக மாணவர் சங்க முதலாவது ஆண்டு விழா

லண்டன், மே 28

அனைத்துலக மாணவர்சங்க முதலாவது ஆண்டுவிழா மிகவும் சிறப்பாக கொதாம்டன் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. விழாவில் மொரீஷியஸ் பாகிஸ்தான், பிரிட்டிஷ் கவுன்சில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அன்று விழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த விருந்தினர்களை அனைத்துலக மாணவர்சங்கத் தலைவர் திரு. சி. இரத்தின சிங்கம் கைலாசி கூறி வரவேற்றார்.

அனைத்துலக மாணவர்சங்கம் இங்கிலாந்தில் கொதாம்டன் மண்டபத்தில் சென்ற மாசி மாதத்தில் உதயமானது. அதன் தலைவராக கெல்லியடியைச் சேர்ந்த திரு. சி இரத்தினசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. இரத்தினசிங்கம் தொழில் ஆட்சிமுறைபட்ட மேற்படிப்பிற்காக இங்கு வந்துள்ளார். பூனா சர்வகலாசாலையில் திரு. இரத்தினசிங்கம் கல்விபயிலும்போது இந்தியாவின் வெளிநாட்டு மாணவர் சங்கத்தின் காரியதரிசியாக மிகவும் திறம்பட செயலாற்றியுள்ளார். அனைத்துலக மாணவர் சங்கத்தின் கௌரவ போஷகர்களாக இந்தியா, பாகிஸ்தான் மொரீஷியஸ் ஸ்தானிகர்கள் கடமையாற்றுகின்றனர்.

கலைச்சார அபிவிருத்திக்கும் சர்வதேச நல்லெண்ணத்தை உண்டாக்குவதற்கும் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதென்று திரு. இரத்தினசிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## சாஸ்திரிக்கு வில்சன்கடிதம்

புதுடில்லி, மே 28

பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் கடிதம் ஒன்றை, டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹை கமிஷனர் திரு பிளிமன் பிரதமர் சாஸ்திரியிடம் சேர்ப்பித்தார்.


திரீ கொயின்ஸ்

சந்தேகத்திற்கே யிடமில்லாத உன்னத லாகர்.




உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திரீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோலற் — ஹொப்ஸ் ஆகியனவும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீருங் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய, முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவம்பண்ணப்படுகிறது திரீ கொயின்ஸ்

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காண்பீர்கள்

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகஸ்தர்கள் :- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு 3


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சமூகசேவை மந்திரிக்கு கடிதம்

குரும்பசிட்டி, வெள்ளி

வடமகுதி சூறாவளி காற்றினாலும் வரட்சியினாலும் ஏற்பட்ட சேதங்களை நேரடியாக பார்வையிட்டு இவற்றினால் கஷ்டமுறும் மக்களுக்கு உடனடியாக தகுந்த நிவாரணம் வழங்கும்படியாக வேண்டுகோள் விடுத்து யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தலைவர் சமூகஜோதி கேட் முதலியார் சி. தியாகராசா தேசிய அரசாங்க சமூகசேவை பகுதி மந்திரி திரு அசோக கருணாரத்தினவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். கடந்த கால கூட்டரசாங்கத்தினால் இதுவரையும் கஷ்டமுறும் மக்களுக்கு போதிய வசதி எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை என கடிதத்தில் மேலும சுட்டிக்காட்டி வெகுவிரைவில் கத்திரியை யாழ்ப்பாணக் விஜயம் செய்யுமாறு கேட்டுள்ளார்.

—

## பலாலியில் தற்காலிக முகாம்

குரும்பசிட்டி, வெள்ளி

இலங்கை ஜேயல் விமானப் படையைச் சேர்ந்த சுமார் 65 படைவீரர்கள் பலாலி விமான நிலையத்தில் தற்காலிகமாக முகாம் அமைத்து தங்குவதற்கென வெகுவிரைவில் இங்கு வரவிருக்கின்றனர். இவர்களுடன் நாலு ஜேயல் விமானங்களும் பலாலிக்கு அனுப்பப்படவிருக்கின்றன. கடடுநாயக்கா விமானநிலையத்தில் கடமையாற்றிய இப்படையினர் அங்குள்ள கட்டிட, பாதைகள் சீர்திருத்தம் செய்யப்படுவதால் மே, ஜூன் ஆகிய இரு மாதங்களும் விமான நிலைய மூடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளது.

## காணி அமைச்சர் நடவடிக்கை

பம்பலப்பிட்டி வெள்ளி

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் காணி நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி பி டி. சில்வா எவ்வளவு காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள முடியுமோ அத்தனை காணியையும் இதற்காகப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமது அமைச்சருக்கு அறிவித்தல் செய்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதியை முற்றாக நிறுத்துமளவுக்கு முயற்சி மேற்கொள்ளப்படவேண்டுமென மந்திரி கருத்து வெளியிட்டுள்ளார்.

—

## தமிழரசுக் கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை தமிழரசுக்கட்சியின் நாவாந்துறைக் கிளை அமைப்பதற்கான பூர்வாங்கக் கூட்டம் சமீபத்தில நாவாந்துறை வாலிபர்களால் கூட்டப்பட்டது.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- யோ. சந்தியோ, உப-தலைவர்- சூ. நீக்கிலாப் பிள்ளை, செயலாளர்- த. அரியநாயகம், உப-செயலாளர்- சூ. யோன்கவாஸ்; தனாதிகாரி- அ. லோறன்ஸ், உப-தனாதிகாரி- ஏ. வின்சலோஸ்.

உத்தியோக பூர்வமான முறையில் கட்சிக் கிளையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதெனவும் வாலிபர்களிடையே ஆட்சிப்பிரசாரத்தை மேற்கொள்வதற்கு முன்னோடியாக "அரசியல் வகுப்புக்கிளை" நடத்த முயற்சிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேசியஅரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி இணைந்ததையிட்டும் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

## கிணற்றுள் விழுந்து சிறுமி மரணம்

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவைச் சேர்ந்த கந்தையா மீனாட்சிசுந்தரத்தின் மகனான ரஞ்சினி என்ற 5 வயதுச் சிறுமி கிணற்றில் விழுந்து மரணமானார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:- பெற்றோர் வீட்டில் இல்லாத சமயம்குறிப்பிட்ட சிறுமி அவர்களது கிணற்றடிக்கு தண்ணீர் அள்ளச் சென்றதாகவும் தற்செயலாக கிணற்றில் விழுந்து மரணமானார் எனவும் தங்கையைக காணாத 11 வயதுடைய தமையனார் தங்கை கிணற்றுள் கிடப்பதைக் கண்டு திடீரென கிணற்றுள் குதித்து அயல் வீட்டுச் சிறுமியின் உதவியுடன் தங்கையை வெளியே எடுத்தாரெனினும் எடுக்க முன்னரே உயிர் நீத்து விட்டான்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு க- வைத்திலிங்கம் தற்செயலாக ஏற்பட்ட சடுதி மரணமெனத் தீர்ப்பளித்தார்.

—

## 'உதவாத அரிசி'

பண்டாரவளை, வெள்ளி

இப்போது விநியோகிக்கப்படும் அரிசியை நாய்கள்கூட உண்ண மறுக்கின்றன. அப்படியெனில் இதை மனிதன் எப்படி உண்பது என பண்டாரவளை நகரசபை அங்கத்தவர் ஜனாப் கே. ஐ. ஜமால்தீன் நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பண்டாரவளையில் விநியோகிக்கப்படும் அரிசிப் பற்றிக்குறைபாடு தெரிவித்து பேசகையில் குறிப்பிட்டார்.

பண்டாரவளைப் பகுதியில் விநியோகிக்கப்பட்ட அரிசியை அவர் சபையினருக்குக் காண்பித்து மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த அரிசி துர்நாற்றம் வீசுவதாக உள்ளது. இதனை எந்தமுறையிலும் சமைத்துவிடமுடியாது. நான் இந்த அரிசியை ஆக்கி உண்ண முயன்றேன். ஆனால் முடியவில்லை. நாய்க்குக் கொடுத்தேன் நாயும் உண்ண மறுத்துவிட்டது.

இதுசம்பந்தமாக உணவுக் கமிஷனருக்கு தெரியப்படுத்தி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்வதென நகரசபை தீர்மானித்தது. ——

## நெடுந்தீவில் பஸ் சேவை

நெடுந்தீவு. வெள்ளி

இங்கு உள்ள சில சங்கங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளாலும் தீவுப்பகுதிப்பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. நவரத்தினத்தின் விடா முயற்சியாலும் நெடுந்தீவில் மிக விரைவில் ஒரு பஸ்சேவை ஒன்று ஆரம்பமாக வுள்ளது. இதற்கென வரவழைக்கப்பட்ட பஸ் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளதாகவும் அதனை நெடுந்தீவுக்குஏற்றிவர ஒரு மோட்டார் படகு யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகவும் அறியப்படுகிறது. கடும் காற்று காரணமாக இப்படகு பஸ்சை ஏற்றிவரமுடியாது யாழ்ப்பாணத்தில் காத்திருக்கிறது. காற்றுகுறைந்தவுடன் பஸ் நெடுந்தீவுக்கு கொண்டு வரப்படும். ——

## 'முதல் உதவி' இல்லாத பஸ்கள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இ. போ. சபையின் சில பஸ்களில் முதல் உதவி சிகிச்சைக்கான உபகரணங்கள் எதுவும் இல்லையென அகில இலங்கை பஸ்பிரயாணிகள் சம்மேளனம் [illegible] இ. போ. ச. தலைவருக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

## "பின்னால் நின்று வெட்டினர்" மந்துவில் இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, வெள்ளி

"முதலாம் எதிரி நாகமுத்து கொலையுண்ட சுப்பிரமணியத்தை இரண்டு தடவைகள் குத்தினார் என்று மந்துவில் இரட்டைக்கொலை வழக்கில் நன்னியன் செல்லப்பா எதிரிகளின் வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போதுகேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் கூறினார். இவ்வழக்கு நேற்று முன்தினம் சாவகசசேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு பி. ஜெபேட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

இவ் வழக்கில் மந்துவிலில் கே. சுப்பிரமணியம், கே. சித்திரன் ஆகியோரைக் கொலை செய்ததாகவும், கே. கிட்டினனைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் இருவர்மீதும் சாவகச்சேரி பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்சார்பில் திரு கே. வி. எஸ். சண்முகநாதன் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

குறுக்குவிசாரணையின்போது நன்னியன் செல்லப்பா கூறியதாவது:-

"கொலையுண்ட சித்திரன் முதலாம் எதிரிக்கு கத்தியால் வெட்டியசமயம் இரண்டாம் எதிரி அருகில் நின்றார். அப்பொழுது 2-ம் எதிரியின்கையில் ஆயுதம் இருந்ததை நான்காணவில்லை. சித்திரன் முதலாம் எதிரியை வெட்டியதைப்பற்றி பொலிசாரைத் தவிர வேறு எவருக்கும் சொல்லவில்லை, முதலாம் எதிரி கத்தியுடன் சித்திரனைத் துரத்திக்கொண்டு சென்ற பொழுது இரண்டாம் எதிரியும் அவர்களைத் தொடர்ந்து ஓடினார். ஆனால் சித்திரனை யாரும் குத்தியதைக் காணவில்லை. சித்திரன் நாகமுத்துவை பின்னால் நின்றுதான் வெட்டினார். பயானத்திலிருந்த பிரேதத்திற்குக் கொள்ளிவைத்தபின்னர் ஒருவரும் குத்துப்படவில்லை."

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

——

## டாக்டருமில்லை; மருந்துமில்லை

வாழைச்சேனை, வெள்ளி

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றி வந்த சேர்ஜன் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அவரது இடத்துக்கு இன்னும் வெறொருவர் நியமிக்கப்படவில்லையென்றும் கல்குடா எம். பி. திரு. கே. டபிள்யு தேவநாயகம் சுகாதார மந்திரிக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

மேற்படி ஆஸ்பத்திரியில் போதிய மருந்துகளில்லையெனவும் திரு தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

சுகாதாரமந்திரி இதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ——

## 1000 துருப்புகள் வாபஸ்


சாந்தா டொமிங்கோ, மே 28

டொமினிக்கன் குடியரசிலிருந்து நேற்று மேலும் 1000 அமெரிக்க துருப்புகள் வாபஸ் பெறப்பட்டன. கடந்த இரு தினங்களில் மொத்தம் 1600 அமெரிக்க துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றனர்.


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

சவரின் வளையல்கள்

நீண்டகாலம் உத்தரவாதமும் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி பி. யில் அனுப்பிவைக்கப்படும்.


M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ருபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ 12-50. M 49 ஜோடி ரூ 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ. 18-50.

# ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, பட்டிநுவர வீதி, கண்டி.






குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விடுதலைத் தினத்தின் பிரகடனம்

பெர்லின் மே 28

"ஜெர்மன் மண்ணிலிருந்து யுத்தமேற்படாம லிருப்பதற்காகவும், ஐரோப்பாவின் அமைதி ஏற்படுத்துவதற்காகவும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும், ஒரு சமாதான ஜனநாயக நாடாக ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்காகவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தொடர்ந்து முயற்சி செய்யும்".

இவ்வாறு பாஸிஸப் பிடியிலிருந்து ஜெர்மனி விடுதலையான 20-வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு விடுத்த ஒரு பிரகடனத்தில் குறிப்பிடுள்ளது. ஜெர்மன் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்ப்பதற்கு உதவும்படி உலக நாடுகளை இப்பிரகடனம் கேட்டுக்கொள்ளுகிறது.

## School of Technology, Jaffna Scholarships.

A few free Scholarships valued at Rs. 50/- per month each are available to Poor Students with qualifications suitable for completing a Course for one year in Electrical Engineering Practice Preliminary or Intermediate (City & Guilds, London).

Applications must be received before 5-6-65, For further particulars, apply to:

Director

"Citadel"
Chundikuli, Jaffna
14-5-65

## பாடசாலை கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையில் கொக்குவில் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 201 ஓட்டங்களை எடுத்து விளையாட்டை முடித்துக் கொண்டது. கொக்குவில் இந்துக்கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் 143 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இரண்டாவது ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி 5 விக்கெட் நஷ்டத்துக்கு 72 ஓட்டங்களை எடுத்து விளையாட்டை முடித்துக்கொண்டது. கொக்குவில் இந்து கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 71 ஓட்டங்களை எடுத்தபோது நேரமாகிவிட்டதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டியும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம் வருமாறு:- முதலாவது ஆட்டம்- யாழ். மத்திய கல்லூரி: 188 ஓட்டங்கள்; மானிப்பாய் இந்துக்கல்லூரி: 189.

2-வது ஆட்டம்: யாழ். மத்திய கல்லூரி: 17[illegible].

## School of Technology, Jaffna.

### 1965-66 COURSES

Candidates with J. S. C.

| | |
|---|---|
| Electrical Installation work<br>Motor Mechanism | Theory & Practical<br>One Year Course |

Candidates with G C E course with passes in Pure Maths., Physics & English

| | | |
|---|---|---|
| Electrical Engineering Practice | (Prelim) | City & Guilds Lond Exams. |
| -do- | (Inter) | |
| -do- | (Final) | |

Candidates with G. C. E. Certificate with Pure Maths English & preferably Drawing.

Authorised Draughtsmen - Surveyor General's Exams May 1966.

| | |
|---|---|
| Civil Engineering Drawing<br>Building Construction | School Certificate |

Builders Quantities — City & Guilds Lond Exam

Applications close 5-6-65. Courses Commence on June 14, 1965. Forms and other particulars can be had from,

DIRECTOR

"CITADEL"
Chundikuli, Jaffna.
12th, May 1965

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 29-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 உரைச்சித்திரம் — மீன் பாடும் தேனகம், 10-00 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 30-5-65

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 இசைவகுப்பு, 8-00 பௌத்தநிகழ்ச்சி, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 பட்டிமன்றப்பாட்டுக்கள்.

இரவு 6-10 இலக்கியநிகழ்ச்சி, 6-15 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோவிலிலிருந்து அஞ்சல், 7-15 நாடகஅரங்கு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மணிவிளக்கு — மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர்கேட்டவை, 10-15 தேர்ந்தஇசை.

## தொழிற் பயிற்சி

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி வாலிபர் முன்னேற்றக்கழகம் சாவகச்சேரித் தொகுதியில் உள்ள படித்த வேலையில்லாத வாலிபர்களின் பெயர் பட்டியலைத் தயாரித்து அவர்களை சுதந்திரமான தொழில்துறைகளில் ஈடுபடுத்தி பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## மந்திரிக்கு கோரிக்கை

சாவகச்சேரி, வியாழன்

அடுத்தமாதம் சாவகச்சேரிக்கு உத்தியோக பூர்வமாகவிஜயம் செய்யும் ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வத்திடம் சாவகச்சேரித் தொகுதியின் முக்கிய பிரச்சினைகள் பற்றிய கோரிக்கை ஒன்றை சமர்ப்பிக்க சாவகச்சேரி வட்டாரக்கு வாலிப முன்னணி முடிவு செய்துள்ளது.

## அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்பாள் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகம்

அடியார்களுக்கு விசேட அறிவித்தல்.

அபிமானிகாள்!

நிகழும் விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை (29-5-65) ஆறு கிரக சேர்க்கை நிகழ்வதனால் அவற்றின் தோஷ பரிகார விசேட வழிபாட்டின் நிமித்தம் அன்று மாலை தொடக்கம் சகஸ்ர சங்குபூசை, விசேட பஞ்ச குண்ட ஹோமம் நடைபெற்று வழக்கம்போல 31-5-65 சோமவாரம் (திங்கள்) காலை பூர்ணாகுதி முதலிய சிறப்புக் கிரியைகளுடன் பகல் பத்துமணியளவில் அபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசை அன்னதானமும் நடைபெறும்.

இரவு விசேட பூசைகளுடன் தண்டிகைத் திருவிழாவு நடைபெறும், அக்காலங்களில் அடியார்கள் யாவரும் சமுகமாய்த் தரிசித்து இட்டசித்திகளைப் பெறும்வண்ணம் விநயத்துடன் அழைக்கின்றோம்.

இசையாளர் சங்க ஆதரவில் மேளவாத்தியம் ஆதியனவும் நடைபெறும். இங்ஙனம்,

அம்பாள் அடியார்கள்.

327

## கல்வி

தட்டெழுத்து. சுருக்கெழுத்து. ஆங்கிலத்தில், தமிழில் சிங்களம், ஆங்கிலம், தையல், ஜி. சி. இ. சாதாரணம் விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தனிப்பாடங்கள் படிக்கலாம். காலை, மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி 426, ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம். பெண்கள் (மட்டும்) கிளை: 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 337

## மீண்டும் வேலைபெற முயற்சி

கொழும்பு, வெள்ளி

உத்தியோகமுறை சாரணமாக அரசாங்க சேவையிலிருந்து கடந்த 8 வருடங்களுக்குள் ஓய்வுபெற்றுள்ள 2,600 அரசாங்க ஊழியர்களில் 600 பேர் திரும்பவும் அரசாங்கசேவையில் பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் வேலைபெற விரும்புவோரில் அநேகமானோர் தாங்கள் முன்பு பார்த்த வேலையையும் முன்பு பெற்ற சம்பளத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

தங்களுக்கு வேலைகொடுக்கும்படி அநேகர் பிரதம மந்திரிக்கும், மற்றும் மந்திரிகளுக்கும் தனிப்பட்ட கடிதம் அனுப்பியுள்ளனர்

—

சாவகச்சேரி வியாழன்

இந்தவாரம் ஆனையிறவு அரசாங்க உப்பளத்தில் சுமார் 10,000 அந்தர் உப்புசிறுபோக உற்பத்தியின்போது சேகரிக்கப்பட்டுள்ளது.

[illegible]

## வாடகைக்கு

கிளிநொச்சி பசாரில், கண்டி ரோட் 158-ம் கடையில் "மீரா பில்டிங்ஸ்" என்ற இரு கடைகள் வாடகைக்குண்டு விபரங்களுக்கு: சிந்தாமணி சொக்கநாதன் மல்லாகம். 335

## வாடகைக்கு

அல்லது

## விற்பனைக்கு

2-ம் குறுக்குத்தெருவில் 83-ம் இலக்கங்கொண்ட கட்டிடம் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு இருக்கிறது. சகலதேவைகளுக்கும் பயன்படக்கூடியது. விபரங்களுக்கு: க. பத்மநாதன், 10, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 324

## தேவை

கண்டி, மாத்தளை, இரத்தினபுரிக்கு ஸ்ரோர் கீப்பர்கள் தேவை. காசுப்பிணையாக ரூ. 3000/-, உறுதிப்பிணையாக ரூ 2000/- நேரில் வரவும். வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 333

வெளியூர்களில் வாணில் சென்று விற்பனை செய்யக்கூடியவர் தேவை, ரொக்கப்பிணை ரூ. 1000/- உறுதிப் பிணை ரூ 1000/- நேரில் வரவும் வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 332

பெண் குமாஸ்தா உடனடியாகத் தேவை. நேரில் வரவும். வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 331

## கல்வி

ஜி. சி. இ. சாதாரண-வர்த்தக வகுப்புகள் தற்போது நடைபெறுகின்றன. உடனே சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூஷன், செல்லியடி, கரவெட்டி. 107, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 321

## குத்தகைக்கு INDUSTRIAL ESTATE

கைத்தொழில் ஸ்தாபனங்கள் அமைக்க தெருமுகப்புடன் காணி வருஷம் பரப்புக்கு ரூபா 80. விபரங்களுக்கு: திருஞானம், ஓடக்கரை, யாழ்ப்பாணம் Phone: 7081. அல்லது கைத்தொழில் நிறுவனம் காவற்றனி. 323

நொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பலகடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலேக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாய பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

B. S. A. பாண்ரம் EY 6821 விபரங்களுக்கு: J. R. மில்ஸ், கொடிகாமம். 325

சாவகச்சேரி நகரசபை எல்லை 2-ம் வட்டாரம் கண்டி ரோட்டு அருகில் 4 1/4 பரப்பு காணியும், கல்வீடும் விற்பனைக்கு இருக்கிறது. செ. சிவகுருநாதர், இல. 11, சங்கத்தானை லேன், சாவகச்சேரி. 388

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக் கருகாமையில் வீடுகட்டுவதற்கு வசதியான 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்க. அ. இராமநாதன், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. 308

## கணித வகுப்புக்கள்

கணித (Maths) பாடங்கள் மாலைநேரங்களில் போதிக்கப்படும். மா. புவனேந்திரன், வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி. 316




அருந்துக

# நுவரெலியா

இது சிறந்த பியர்

ஏனெனில்

* 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
* 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
* இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது

தெரிவதற்கு

பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி 'சமநாடு' குருவனி கண்ட சிவாரணச் சபையார் ஆரம்பித்த மாத உதவித் திட்டத்துக்கு தெமட்டகொடையைச் சேர்ந்த ஒருவர் தமது மே மாதப் பணமான 25 ரூபாவையும் அனுப்பிவைத்துள்ளார்.

## தேசிய சுவிப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 06 L 0872 | 05 N 0468 | 13 D 0906 |
| 14 W 0566 | 04 C 0493 | 05 Z 0523 |
| 11 M 0856 | 05 V 0356 | 08 R 0780 |
| 05 X 0810 | 02 B 0977 | 08 B 0722 |
| 07 Y 0151 | 12 G 0364 | 05 L 0083 |
| 07 Y 0525 | 08 O 0080 | 12 G 0939 |
| 12 R 0460 | 07 T 0104 | 09 R 0623 |
| 12 W 0395 | 07 T 0459 | 05 C 0479 |
| 11 P 0819 | 12 R 0663 | 12 D 0302 |
| 05 M 0413 | 05 O 0853 | 02 N 0789 |
| 05 V 0649 | 08 S 0392 | 11 F 0323 |
| 05 M 0442 | 09 S 0912 | 04 P 0154 |
| 13 G 0354 | 01 A 0418 | 03 M 0096 |
| 02 N 0407 | 12 P 0820 | 10 U 0289 |
| 04 M 0282 | 01 Z 0230 | 01 Y 0810 |
| 06 J 0067 | 09 X 0171 | 02 K 0317 |
| 10 Q 0678 | 09 N 0049 | 13 U 0065 |
| 12 G 0579 | 08 K 0929 | 12 E 0018 |
| 02 G 0150 | 03 L 0626 | 03 Q 0589 |
| 02 S 0345 | 09 J 0122 | 09 Y 0906 |
| 11 M 0794 | 08 L 0012 | 03 Y 0308 |
| 10 J 0466 | 13 C 0380 | 04 F 0198 |
| 04 C 0842 | 01 O 0765 | 05 D 0404 |
| 11 D 0528 | 11 P 0492 | 04 Y 0775 |
| 10 K 0735 | 12 T 0245 | 07 C 0719 |
| 08 Z 0230 | 10 B 0753 | 03 G 0606 |
| 12 J 0249 | 12 A 0494 | 11 Z 0699 |
| 06 F 0086 | 07 X 0396 | 10 N 0980 |
| 05 R 0726 | 05 W 0752 | 10 X 0881 |
| 06 Z 0267 | 09 Y 0482 | 05 P 0813 |
| 06 W 0767 | 07 T 0350 | 02 F 0765 |
| 05 V 0964 | 04 W 0643 | 12 L 0610 |
| 13 Z 0821 | 02 X 0772 | 05 C 0239 |
| | | 03 M 0618 |
| | | 03 N 0497 |


REGAL - JAF.
NOW SHOWING
TABHUNTER
in
THE GOLDEN
ARROW
(Technirama - Technicolor)


# வில்லூன்றி வீரகத்தி . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெனவும் அதன் சித்திய சைமி த்தியங்களுக்கும் இராஜாதிகளின் கள் இருந்த எனவும், பின்னர் அன்னியர் ஆட்சிக் காலத்தில் இந்தக்கோயில் தரைமட்டமாக்கப்பட்ட தெனவும் ஓர் பாடுக்கை கொக்குமிட்டத்து, புராதன ஆலயம் இருந்தமை உண்மை வரலாறாக இருக்கலாம என ஊகிக்க, அவை இடந்தந்து நிற்கின்றன. இந்த ஆலயத்துக்குரிய நிலங்கள் இப்பொழுது முடிக்குரிய காணியாகவிட்டன. ஆனைக்கோட்டைக் காணிகள் 'தலுக்கோட்டித்தோட்டம்' என்றும்பெயருடன் காணிகள் இருப்பதும் அவதானிக்கத்தக்கது.

### இப்போதுள்ள விநாயகர் ஆலயம்

ஆங்கிலேயர் கால ஆட்சி புரிந்த காலத்தில் இந்தப் புனித தீர்த்தக்துக்கண்மையில் கீழ்த்திசையில் அரசர் எம்பர் பெயர் தாங்கிய விநாயகர் ஆலயம் ஒன்றினைச் சிறிய கட்டிடத்தில் அமைத்தார். பின்னர் 1892 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்தைந்தாம் நாள் திரு. மாரிமுத்துவென்பவரும் திரு. வைரமுத்து கிருஷ்ணர் எனப்படும் இக்க ஆலயத்திற்கிய திருத்தவேலைகளைச்செய்தனர். 1893-ம் ஆண்டுக்குச் சமமான விஜய ஆண்டு தைத்திங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு புனித நன்னுணில ஆவ பிரதிஷ்டைச் சிறப்புற நிறைவேறியது. 1913-ம் ஆண்டு ஆனித்திங்கள் 27-ம் திகதி தொடக்கம் இந்த ஆலயத்தில் இரண்டுகாலப் பூசைகள் நடைபெற திரு. மாரிமுத்து வெற்றிவேலு அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். 1916-ம் ஆண்டு தொடக்கம் திரு. கிருஷ்ணர் வைரமுத்து என்பவர் கோயில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று மூன்றுகாலப் பூசை நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார்.

### கோயில் தர்மகர்த்தா

இவ்வாறுபடிப்படியாக முன்னேற்றமடைந்துவந்துள்ள வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகப் பொறுப்பினை 1942-ம் ஆண்டு தொடக்கம் திரு. சோ. இராசரத்தினம் அவர்கள் கையேற்றுச் செவ்வனே நடாத்திவருதல் மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

இத்தகைய தொண்டரின் அரும்பெரும் முயற்சியாலும் அன்பர்களின் ஒத்துழைப்பாலும், வசந்தமண்டபம், சுற்றுமண்டபம் அர்த்த மண்டபம், வெளிமண்டபம், வைரவர் ஆலயம், நவக்கிரக ஆலயம் முதலியன கட்டப்பெற்றுள்ளன. மேலும் செளரி சமேத சந்திரசேகர உற்சவமூர்த்தி இவர் காலத்திலேயே பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது. இப்பொழுது ஐந்து கால பூசை இந்த ஆலயத்தில் நடைபெறுகின்றது.

ஸ்ரீவிளம்பி வருஷம் தைத்திங்கள் 16-ஆம் திகதி (29-1-59) அன்று வில்லூன்றி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக பக்திச் சூழ்நிலையில் நடைபெற்றது.

### மகோற்சவம்

இந்த வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்றம் வைகாசித் திங்கள் 8-ம் நாள் 25-5-65) நடைபெற்றது. 28-5-65-ல் வேட்டைத்திருவிழாவும் அடுத்தநாள் சனிக்கிழமையாகிய இரதோற்சவமும் நடைபெறும். பகல் 1 மணியளவில் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்: சைவ அன்பர்கள் விக்கினங்களை விலக்கும் விநாயகப் பெருமானை தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து ஆசாரசீலராய், விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வீடுகளில் வைத்துவிட்டு பக்தியுடன் ஆலயஞ்சென்றுவணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்களாக.

# உலகசரித்திரத்தில் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் உணரத்தக்கதாகப் பல சம்பவங்களும் நடக்கும். உலகிலே எங்கணும் குரூர சம்பவங்கள், ஒழுக்கக்கேடுகள், தலைவர்களுக்கு ஆபத்துகள், வங்கிக் கொள்ளைகள், அத்துமீறிய செயல்கள் அதிகரிப்பு, விஞ்ஞானத்தில் புதுப்புது விஷயங்களைக் கண்டுபிடித்தல் ஆதியனவெல்லாம் நடக்கும். பலநாட்டுத் தலைவர்கள் அழிக்கப்படுவார்கள்; குரூரமாக கொலைசெய்யப்படலாம்.

இடப ராசிக்கு 4 8 10ம் இடங்களை இராசியாகவோ அல்லது இலக்கினமாகவோ கொண்ட தனிப்பட்டவர்களும் அவதானமாக இருப்பது நலம். இந்த அமைப்புடையவர்களுக்கு ஆபத்துகளுண்டு. நாடுகளுக்கு இந்த அமைப்பு இருக்குமானால் அந்நாடுகளது தலைவர்களுக்கு ஆபத்துகளும் நாடுகளில் மூற்சதியால் கஷ்ட பலன்களும், பூமியதிர்ச்சி முதலிய இயற்கைக் கூறுபாடுகளும் நடக்கும்.

இக்கிரககூடத்தின் பலனாக ஈழத்திலும் கஷ்டங்கள் உள்ளன. முக்கியமாக இலங்கையின் வடபகுதியில் 29 முதல் 31க்குள் சில கஷ்டங்கள் நடக்க இடமுண்டு. உயிர்ப் பலிகளும் ஏற்படலாம். இந்நாட்டுத் தலைவர்கள் சதிச்செயலுக்கு ஆட்படாது புத்திசாதுரியமாக நடப்பதும் அவசியமாகும். சில பிரபலஸ்தர்கள் மறைவுக்கு மே29 முதல்டிசம்பர் வரை இடமுண்டு. ரோகங்கள் கட்டுக்கோள்கள் இயற்கை அழிவுகள்கூட நடக்கலாம் ... தலைவர்கள் அவதானமாக நடப்பது முக்கியமாகும். சில இடங்களில் தலைவர்கள் மறைவு மற்றும் கடக்க இடமுண்டு. தென்கிழக்கு தீவிரமான யுத்த கேந்திரமாகும்.

இடபத்தில் கார்த்திகை 2ம் பாதம் முதல் மிருகசீரிடம் 2ம் பாதம் முடிவுவரை நிற்கும் இக்கிரககூடத்தின் போது கிரகங்கள் பலவாக இருப்பினும் உதிவேகம் குறைவென்று கூறவோ நடக்கக்கூடிய பலன்கள் சுபமாக இருக்குமென்று கூறவோ இயலாது. அட்டகிரக சேர்க்கையிலும் பார்க்க இக்காலம் கஷ்டமுடையது. தீயபலன்களைத் தருவதென உறுதியிட்டு உண்மையை உரைக்கின்றேன் தெய்வ வழிபாடு பெறுக.

# ஆபத்தான நிலையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படாததால் அவரைத் தேடி 14-ம் நம்பர் வார்ட்டிற்கும், 11-ம் நம்பர் வார்ட்டிற்கும் சென்றேன். டாக்டர் அங்கும் காணப்படவில்லை. ஆதலால் திரும்பிச் சென்று நேர்சிடம் டாக்டரைக் காணவில்லையென்று தெரிவித்தேன். விசாரணையின் பின் இதுசம்பந்தமாகத் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் குறிப்பிட்டதாவது: "யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் வல்லாத்தினத்தின் கூற்றுப்படி இறந்தவர் வார்ட்டுக்கு உடனடியாக அனுப்பப்பட்டிருந்தால் அவரின் உயிர்காப்பாற்றப்பட்டிருக்கலாம் என்று கூறியிருக்கிறார். இந்த நடுத்தர வயதுள்ள பெண் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் நல்ல இரத்தம் பெறுவதற்காக வேண்டிய குறிப்புகளுடன் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். ஆனால் இந்த நோயாளி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பராமரிக்கப்படாமலேயே மரணமானார். இது யாரும் விம்விக்கத்தக்கதொரு விஷயமாகும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நோயாளி பிற்பகல் 1-25க்கு அப்போதிக்கரியினால் அனுமதிக்கப்பட்டார். ஆனால் வார்ட்டுக்கு நோயாளி எடுத்துச்செல்லப்பட்ட நேரம் பிற்பகல் 2 மணிக்கு மேயாகும். இறந்தவர் அறிவுடன் இருந்து அப்பொழுது கதைத்துக் கொண்டிருந்தார். ஆனால் 3 மணிக்கு டாக்டர் தனது வழமையான வார்ட் சோதனைக்குச் செல்லும்பொழுது நோயாளி இறந்துகிடப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இந்த ஆபத்தான நோயாளியின் நிலைபற்றி அவருக்கு அறிவிக்கப்படவில்லை.

அப்பொழுது கடமையாற்றிய நர்ஸ் சிவப்புநாடாவைப் (நிர்வாகக் கட்டுப்பாடுகளை) பின்பற்றும் ஒரு மரக்கம்பு போலத் தெரிகிறது. இந்த நர்ஸ் பதிவுப்புத்தகத்தை டாக்டருக்கு அனுப்பியதைவிட வேறொன்றும் செய்யவில்லை, புத்தகம் அனுப்பி அரைமணி நேரத்தின் அற்றுடன் வார்ட் டாக்டர் விடுதியில் இல்லையென்று வந்து கூறினார். நர்ஸ் வார்ட் டாக்டர் மூலமே டாக்டருடன் தொடர்புகொள்ள விரும்பினார். சிவப்புநாடாவின் பிரதிபலிப்பான நர்ஸ் நோயாளியின் கதியற்றிக் கவலைப்படவில்லை.

வார்ட்டிற்கு தானாக வரும்வரை இதுவிஷயம்பற்றி ஒருவரும் தனக்கு தகவல் கொடுக்கவில்லையென்று டாக்டர் தெரிவித்துள்ளார். காங்கேசந்துறை ஆஸ்பத்திரியிலிருந்துவதற்காக இந்த நோயாளி அனுப்பப்பட்டாரோ அந்தசிகிச்சை பெறாது நோயாளி கவனிப்பாரற்று மரணமானார்.

நோயாளி அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கும் வார்ட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட நேரத்திற்குமுள்ள வித்தியாசம் இந்த ஆஸ்பத்திரியின் கேவலமான நிலையையும் மனிதாபிமானமற்ற நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது.

தானேதோ கடமை செய்துவிட்டதாக 'நேர்ஸ்' திருப்தி கண்டார். இந்தச் 'சிவப்புநாடா' முறை பிரதான நேர்ஸ் இடமும் மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களிடமும் தாண்டவமாடின் ஆஸ்பத்திரி கடைசியான இடம் என்று கூறுவதற்கு வருத்தப்படவேண்டும். அரசாங்க கந்தோர்களில் சிவப்புநாடா சிறு கஷ்டங்களைத் தான் கொடுக்கும் ஆனால் ஆஸ்பத்திரியில் 'சிவப்பு நாடா உயிருக்கே உலைவைத்துவிடும்'

இதர அரசாங்க கந்தோர்களைப்போல ஆஸ்பத்திரியைக் கருதக்கூடாது. இங்கே உயிர்களுடனும் ஆட்களுடனும் நாங்கள் ஊடாடுகிறோம். சுகவீனங்கள் முன்னறிவித்தல் கொடுப்பதில்லை, சுகயீனங்கள் திடீரென்று ஏற்படும். ஆகவே உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதனை ஆஸ்பத்திரிகள் செய்யத்தவறின் அவைகள் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கமே இல்லாமல் போய்விடும். 'சிவப்புநாடா' ஒரு ஒருசாபக்கேடாக எல்லாக் காரியாலயங்களிலும் அமைந்துவிட்டது. சுகாதாரப் பகுதியினர் நோயாளிகளை துன்புறுத்தாதும் அவர்கள்மேல் பழிவாங்காதும் 'சிவப்பு நாடா' முறையின்றியும் கவனிப்பார்களென்று நாம் நம்புகிறோம். இந்த 'சிவப்புநாடா' விரைவில் நீக்கப்பட்டால் எல்லோருக்கும் விமோசனம் பிறக்கும்.

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தால் அது அபிவிருத்தியடையவும், அதில் வேலைசெய்பவர் அதிக சுதந்திரமாகவும் உற்சாகமாகவும் கடமையாற்றவும் முடியும்.

இமையா துயிராயிருந்தாய் போற்றி என் சிந்தை நீங்கா இறைவா போற்றி, உமைபாகமாகத் தணைத்தாய் போற்றி ஊழியேழுமான வொருவா போற்றி, அமையாவரு நஞ்சமார்ந்தாய் போற்றி, ஆதிபுராணனாய் நின்றாய்போற்றி, சுமையாகி நின்ற கனலே போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி — அப்பர்சுவாமிகள்

# பதுக்கல்காரர்களுக்கு 3 மாத கடுழியச்சிறை

பம்பலப்பிட்டி, வியா

விலைக்கட்டுப்பாட்டு சட்டம் அமுலாக்கப் படும்பொழுது பதுக்கல்காரர்களும் கள்ளச் சந்தைக்காரர்களும் தண்டனைக்குள்ளாகுவார்கள்.

சட்டவிரோதமாகப் பதுக்கி வைத்தல், கள்ளச்சந்தையில் விற்பனைசெய்தல் முதலிய குற்றங்கள் புரிவோருக்கு 3 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும். இதுதான் இத்தகைய குற்றவாளிகளுக்குக் கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த தண்டனையாகும்;

இந்த திருத்தச் சட்டத்தை உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. ஏ. சில்வா கொண்டுவரவிருக்கிறார். இதுவிரைவில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.


திரு. சில்வா இதுசம்பந்தமாகத் தெரிவிக்கையில், தற்போது சட்டவிரோதமான வியாபாரக் குற்றங்கள் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை குறைவானதாக இருக்கிறதெனக் குறிப்பிட்டார்.

தற்போதைய விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம் முதல்குற்றத்துக்கு 500 ரூபாவுக்கு மேற்பட்ட தண்டமும் 6 மாதங்களுக்கு மேற்படாத சிறையும் வழங்க அங்கீகாரமளிக்கிறது. அடுத்த ஒவ்வொரு குற்றத்துக்கும் 10,000 மேற்படாத தண்டனையும் 2 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறையும் வழங்கச் சட்டம் அனுமதியளித்திருக்கிறது. குற்றவாளியாகக் காணப்படும் வியாபாரிகளுடைய வர்த்தகலைசென்ஸ் ரத்துச் செய்யப்படவேண்டுமென்றும் திரு. சில்வா தெரிவித்துள்ளார்.


வெற்றிகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) நீவோனி (நுவரேலியா)
லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடோர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு


இப்பத்திரிகை ... யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 96-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org